## ஊடக அறிவித்தல்

## இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## 2025 கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( உயர் தர)ப் பரீட்சையை மீண்டும் ஆரம்பித்தல்.

நாடளாவிய ரீதியில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக 2025 கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சையில் பரீட்சை நடைபெறாத பாடங்களை **2026 ஜனவரி மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி வரை** நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான திருத்தப்பட்ட பரீட்சை நேர அட்டவணை இதனுடன் முன்வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

பாதிப்படைந்த பாடசாலைப் பரீட்சார்த்திகள் தம்து பரீட்சை நிலையத்திற்குச் செல்ல முடியாதிருப்பின் தங்களுடைய பாடசாலை அதிபருக்கு அறியத்தரல் வேண்டும். அவ்வாறு அதிபர்களும் தமது பாடசாலையில் பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் இருப்பின் அது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர், பரீட்சை ஆணையாளர் (பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேறு) ஆகியோருக்கு அறியத்தரல் வேண்டும்.

அவ்வாறே பாதிப்படைந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தம்க்குரிய பரீட்சை நிலையத்திற்குச் செல்ல முடியாதிருப்பின் கீழே தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்கள் அல்லது மின்னஞ்சல் ஊடாகத் தொடர்பு கொள்ள முடியும்.

நேரடி அழைப்பு இலக்கம் - 1911

தொலைபேசி இலக்கம் - 0112784208, 0112784537, 0112786616

தொலைநகல் இலக்கம் - 0112784422

மின்னஞ்சல் முகவரி - gcealexam@gmail.com

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே

பரீட்சை ஆணையாளர் நாயகம்